**ம.சா.1– வைரமுத்து** **Probate.O.P.No.151/2024** 13.11.2025

**2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை –**

1ம் எதிர்மனுதாரர் என்னுடைய தகப்பனார். நான் திருச்சியில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் ராஜபாளையத்தில் குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். பகுதி வழக்குமூலம் ஏற்படுவதற்காகவே நான் ராஜபாளையத்தில் குடியிருந்து வருவதாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் என்னுடன் குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அவர் ராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறார். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் ராஜபாளையத்தில் குடியிருந்து வருவதற்காக ஆதரமாக ஆதார்கார்டு மற்றும் ரேசன்கார்டு வைத்திருந்தேன். தாக்கல் செய்துள்ளேன். 1ம் எதிர்மனுதாரரின் முகவரியை நான் மனுவில் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் அது தவறு.

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

| |
|---|
| என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.<br><br>முதன்மை மாவட்ட நீதிபதி,<br>ஸ்ரீவில்லிபுத்தூர். |